KS_B Kantonsspital Baden
Ort der Gesundheit

Kantonsspital Baden AG
CH-5404 Baden
www.ksb.ch

# Anästhesie

## Aufklärung und Einwilligung

**Anästhesie**
Sprechstunde
Direkt +41 56 486 31 46
ipas.chirurgie@ksb.ch

## அன்பான ஆண் நோயாளர்களே, அன்பான பெண் நோயாளிகளே, அன்பான பெற்றோரே

உங்களுக்கு (அல்லது உங்கள் பிள்ளைக்கு) திட்டமிடப்பட்டுள்ள சத்திரசிகிச்சையை வெற்றிகரமாகவும் வேதனையின்றியும் மேற்கொள்வதற்கு, ஒரு விதமான மயக்கும் நடைமுறை (உணர்வில்லாமல் செய்தல்) தேவைப்படுகின்றது. மயக்குவதற்குப் பொறுப்பான ஒரு ஆண் அல்லது பெண் வைத்தியர், திட்டமிடப்பட்டுள்ள சத்திரசிகிச்சைக்கு மிகவும் உகந்த மற்றும் உங்களுக்கு குறைவான தாக்கத்தைக் கொடுக்கக்கூடிய மயக்கும் நடைமுறையை உங்களுடன் நேரடியாகக் கதைத்துத் தீர்மானித்துக் கொள்வார். அதேவேளை மயக்கும் விதம் எவ்வாறு நடைபெறும் என்றும், வித்தியாசமான நடைமுறைகள் குறித்தும், இதிலுள்ள சாதகங்கள் மற்றும் பாதகங்கள் குறித்தும் உங்களுக்கு அறியத்தருவார். மயங்க வைப்பது குறித்து உங்களுக்குத் தெளிவில்லாது இருப்பின் அனைத்துக் கேள்விகளையும் கேட்குமாறும் அவற்றை இந்தத் தாளின் பின் பக்கத்தில் எழுதிக் கொள்ளுமாறும் தயவாக உங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

## மயங்க வைக்கும் நடைமுறை

ஒவ்வொரு மயங்க வைக்கும் விதமும் விசேடமான ஆபத்துக்களைக் கொண்டது, இவைகள் குறித்து நாங்கள் உங்களுக்கு அறியத்தர விரும்புகின்றோம். முழுவதுமாகப் பார்க்கும்போது பாரதூரமான பிரச்சினைகள் ஏற்படுவது மிகவும் குறைவாகும், இருப்பினும் நாங்கள் உங்களுக்கு பொதுவான மற்றும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஆபத்துக்கள் குறித்து அறியத்தர வேண்டியது கட்டாயமானதாகும்.

பொதுவான ஆபத்துக்கள்: சுவாச-, இதய-, குருதிச்சுற்றோட்ட-பிரச்சினைகள், ஒவ்வாமை எனும் அலெர்ஜியால் பாதிப்படை-தல், படுக்கவைப்பதால் ஏற்படும் பாதிப்புகள் (நரம்புகள் பாதிப்படைதல்), சிறுநீர்க்குழாய் பிரச்சினைகள், குமட்டல், வாந்தி, சொறிதல், குளிரால் நடுங்குதல், இரத்தம் கண்டுதல், முதுகுவலி போன்றவை.

### பொதுவாக மயக்குதல் (முழுமையாக மயக்குதல்)

பொதுவாக மயக்கும் முறையின் ஊடாக, வித்தியாசமான மருந்துகளைக் கொண்டு, வேதனையை உணர்வது மற்றும் அறிவுடன் இருப்பது சத்திரசிகிச்சை நிறைவுபெறும் வரையாக நிறுத்தி வைக்கப்படும். வழமையாக இதன்போது மூச்செடுப்பதற்கு செயற்கையான உதவி வழங்கப்படும், இது குறித்து நீங்கள் உணர்ந்துகொள்ள மாட்டீர்கள் ஏனென்றால் நீங்கள் உறக்கமாக இருப்பீர்கள்.

குறிப்பிடும்படியான ஆபத்துக்கள்: குமட்டல் மற்றும் வாந்தி சுவாசப்பை பாதிப்படைதலுடன் (நீர் உள்ளே செல்லுதல்), பல்-, கண்-, படுக்கையில் இருப்பதால் ஏற்படும்- பாதிப்புகள், வாய்க்குள் இருக்கும் தோல்-, தொண்டை-இ மற்றும் குரல்வளம் -பாதிப்படைதல், தொண்டை கட்டுதல், விழுங்குவதில் பிரச்சினை, குளிரால் நடுங்குவது, சிறுநீர் கழிப்பதில் சிரமம். ஹோமோன்கள் சுரக்காமல் விடப்படல் (கருத்தடை மாத்திரை அல்லது அவை போன்றவைகளால்).


### குறிப்பிட்ட பகுதியை மயக்குதல் (பகுதி மயக்குதல்)

பல சத்திரசிகிச்சைகளின்போது, சிகிச்சையளிக்க வேண்டிய உடலின் ஒரு பகுதியில் மட்டும் வேதனையை உணராமல் இருக்கச் செய்வதற்கான வசதிகள் உள்ளன. இவ்வாறான பகுதி மயக்குதலின்போது நீங்கள் விழிப்பாக இருப்பதுடன், தலையில் இசைக் கருவியை அணிந்து இசை கேட்கலாம் அல்லது நித்திரைக்கான மாத்திரையை எடுத்தபின் உறங்கிக் கொள்ளலாம். தற்சமயம் பகுதியை மயக்கும் மருந்தின் செற்பாடு போதாவிடின் எந்த நேரத்திலும் மேலதிகமாக வேதனையைக் குறைப்பதற்கான மருந்துகள் சேர்க்கப்படும் அல்லது முழுமையான மயக்குதல் செயற்படுத்தப்படும்.

### மத்திய பகுதியை மயக்குதல்: முள்ளந்தண்டுக் கால்வாயை மயக்குதல், முள்ளந்தண்டின் கவசப்பகுதியை- அல்லது முள்ளந்தண்டின் சதைப் பகுதியை மயக்குவது

பகுதியை உணர்வில்லாது செய்வதற்காக ஒரு மருந்து (உடற்பகுதியை மயக்கும் மருந்தை) முள்ளந்தண்டைச் சுற்றியுள்ள நீர்ப்பகுதிக்குள் (கால்வாயை மயக்குதல்) அல்லது முதுகுத் தண்டு மற்றும் முள்ளந்தண்டுக் கால்வாய்க்கு இடையேயான இடைவெளிகளுக்குள் ((முள்ளந்தண்டின் கவசப்பகுதியை- அல்லது முள்ளந்தண்டின் சதைப் பகுதியை மயக்குவது) ஊசியினால் ஏற்றப்படும். இதனால் குறிப்பிட்ட நேரத்திற்கு வேதனை உணராது செய்யப்பட்ட உடற்பகுதி முதல-ில் சூடாகும், பின்பு உணர்வற்றதாகவும் அசைக்க முடியாததாக அல்லது குறிப்பிட்டளவில் அசைக்கக் கூடியதாக இருக்கும். முள்ளந்தண்டின் கவசப்பகுதியை- அல்லது முள்ளந்தண்டின் சதைப் பகுதியை மயக்கும்போது மேலதிகமாக பொதுவாக மயக்கமாக்குவதையும் சேர்த்துக் கொள்ள முடியும்.

குறிப்பிடும்படியான ஆபத்துக்கள்: இரத்தம் கண்டல், இரத்தக் குழாய்- சுவாசப்பை- மற்றும் நரம்பு பாதிப்படைதல், மூச்சு-, இதய-, குருதிச்சுற்றோட்ட- கோளாறுகள், ஒவ்வாமை அறிகுறிகள், கிருமிகள் தொற்றுதல், கொப்புளமாகுதல், பாரிசவாதம், வாந்தியால் சுவாசப்பை பாதிப்பு (நீர் உள்ளே செல்லுதல்), தலையிடி, சிறுநீர்கழிப்பதில் பிரச்சினைகள், இந்த நடைமுறை சரிவராவிட்டால் பொதுவாக மயக்கும் முறைக்கு மாற்றுதல.



Kantonsspital Baden AG
CH-5404 Baden
www.ksb.ch

### சுற்றிடப் பகுதியை மயக்குதல்: நரம்பை செயலிழக்கச் செய்தல்

இது தனிப்பட்ட ஒவ்வொரு நரம்புகளை அல்லது நரம்பு மண்டலத்தை ஒரு சாதாரண மயக்கும் மருந்தின் மூலம் உணர்விழக்கச் செய்வதாகும், உதாரணமாக மேற் கை, அல்லது கையை உணர்வற்றதாக்குவதற்கு கமர்க்கட்டின் உள்ளே உள்ள நரம்பில் ஊசி ஏற்றி உணர்வற்றதாக்குவது (axilläre Plexusblockade).

குறிப்பிடும்படியான ஆபத்துக்கள்: இரத்தம் கண்டல், இரத்தக்குழாய்-, சுவாசப்பை மற்றும் நரம்பு பாதிப்படைதல், மூச்சு-, இதய-, குருதிச்சுற்றோட்ட- கோளாறுகள், ஒவ்வாமை அறிகுறிகள், கிருமி தொற்றுதல், கொப்புளமாகுதல், இந்த நடைமுறை சரிவராவிட்டால் பொதுவாக மயக்கும் முறைக்கு மாற்றுதல்.

### ஒன்றுசேர்ந்த மயக்குதல் (பகுதி- மற்றும் முழு உணர்வற்றதாக்குதல்)

பெரிய சத்திரசிகிச்சையின்போது மற்றும் பிள்ளைகளின் வயத-ில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளும்போது சத்திர சிகிச்சையின் பின்பு வேதனைப் பராமரிப்பை இலகுவாக்குவதற்காக, அதிகமாக இரு மயக்கும் வகைகளும், பகுதி மயக்குதல் மற்றும் முழுமையாக மயக்குதல், ஒன்றுசேர்த்து மற்றும் ஒரே நேரத்தில் வழங்கப்படும்.

### அமைதியடைவதற்கான மருந்தைக் கொடுப்பது (Sedation) அதேபோன்று சத்திர சிகிச்சை வைத்தியரால் உடற்பகுதியை உணர்வற்றதாக்குவது

மிகக் குறைவான சத்திரசிகிச்சைகள் தனியாக உடற்பகுதியை சத்திரசிகிச்சை வைத்தியர் உணர்வற்றதாக்குவதன் மூலம் செய்துகொள்ள முடிகின்றது. இதன்போது மயக்கும் வைத்தியக் குழு பொதுவாக மயக்குதல் அல்லது பகுதியை உணர்வற்றதாக்குதல் நடைமுறை போன்று இதைக் கண்காணித்துக் கொள்வதுடன், தேவைப்படின் மேலதிக வேதனை குறைக்கும்- மற்றும்∴அல்லது அமைதிப்படுத்தும் மருந்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### மேலதிகமாகத் தேவைப்படக்கூடிய கண்காணிப்புக் கருவிகள்

- மத்திய நரம்புக்குள் ஊசிமருந்து ஏற்றுதல் (ZVK): உள்செலுத்துவது அதிகமாக கழுத்து அல்லது தோள் கழுத்து எலும்புக்குக் கீழாக..
  ஆபத்துக்கள்: இரத்தக்குழாய்-, நரம்பு-, இதய-, நெஞ்சுக்குக் கீழான பகுதியில் பாதிப்பு, சுவாசப்பை சுருங்குதல் சிலவேளைகளில் காற்றை வெளியேற்றும் இயந்திரத்தைப் பொருத்த வேண்டி ஏற்படல், கிருமி தொற்றுதல், கண்டல், இரத்தம் நஞ்சாதல், இரத்த நாளத்தில் அடைப்பு, இரத்த நாடியில் அடைப்பு

- இரத்த நாளத்தில் ஊசி மருந்து ஏற்றுதல்: அதிகமாக கை மூட்டு நாளத்தில் உள்செலுத்தப்படும் (A. radialis)
  ஆபத்துக்கள்: இரத்தக்குழாய்- மற்றும் நரம்பு பாதிப்படைதல், இரத்த ஓட்டம் தடைப்படல், கிருமி தொற்றுதல், கண்டல்.

- சிறுநீர்ப்பைக்குள் குழாய் இடல் (DK)
  பத்துக்கள்: கிருமி தொற்றுதல், சிறுநீர்வழி காயமடைதல், சிறுநீர்க்குழாய் சுருங்குதல

- இரத்தம் ஏற்றுதல்: கடுமையாக காணபிக்கும் பகுதி!
  ஆபத்துக்கள்: கிருமி தொற்றுதல், எதிர்விளைவுகள், காய்ச்சல், மாற்றிவிடுதல் மற்றும் பிழையாக ஏற்றுதல்

- தீவிர கண்காணிப்புப் பகுதியில் சிகிச்சை: சத்திரசிகிச்சையின் பின்பு தீவிர சிகிச்சைக்குத் திட்டமிட்டிருந்தால் அல்லது அது நடந்தவிதத்தைப் பொறுத்து இவ்வாறான சந்தர்ப்பம் அமையலாம்.

கேள்விகள், குறிப்புகள்:

______

______

______

______

## அணிருகாட்

இத்தால் நான், திட்டமிடப்பட்டுள்ள மயக்கும் நடைமுறை மற்றும் தேவைப்படின் எடுக்க வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கும் உரையாடலின் மூலம் விபரமாகத் தகவல் தரப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றேன். இதன்போது என்னால், விசேடமாக ஆபத்துக்கள் மற்றும் ஏற்படக்கூடிய சிக்கல்கள், பக்க- மற்றும் பின் நடவடிக்கைகள் (உ-ம்: இரத்தம் ஏற்றுதல்) மற்றும் அதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் மற்றும் ஏற்படக்கூடிய சிக்கல்கள் அதேபோன்று பதில் நடைமுறைகள் குறித்து எனக்கிருந்த அனைத்து முக்கியமான கேள்விகளையும் கேட்டுக்கொள்ள முடிந்தது. எனக்கு வேறு மேலதிக கேள்விகள் இல்லை, நான் தகுந்த அளவில் தகவல்களைப் பெற்றுள்ளேன் அத்துடன் மேற்கொள்ளவிருக்கும் சத்திரசிகிச்சைக்குத் தேவையெனக் கதைக்கப்பட்ட மயக்கும் நடை-முறையை செயற்படுத்த இதன்மூலம் சம்மதிக்கின்றேன். இதன்போது கதைக்கப்பட்ட மயக்கும் நடைமுறையில் மருத்துவ ரீதியாக அவசியம் தேவைப்படும் மாற்றங்கள் அல்லது மேலதிக நடவடிக்கைகளுக்கும் நான் சம்மதம் தெரிவிக்கின்றேன். மிகக் குறைந்தளவில் ஏற்படும் ஆபத்துக்கள் குறித்து சாதாரணமாக இடம்பெறும் விளக்கும் உரையா-டல்களின்போது நோயாளிக்கு விசேடமான விருப்பங்கள் இருந்தால் அன்றி மேலதிக விளக்கங்கள் வழங்கப்படுவதில்லை.

திகதி ______ நேரம், கால அளவு ______

பங்கேற்ற நபர்கள ______

______

கையொப்பம் /நோயாளி /நோயாளர் /பெற்றோர்

______

கையொப்பம்: மயக்கும் பெண் வைத்தியர்/மயக்கும் ஆண் வைத்தியர்